 (இணைப்பு- 4)

<u>மத்திய மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டு 02 இலக்க அவசகால நிதிச் சட்டம்</u>

(1990.03.07 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டது.)

1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க, மாகாண சபைச் சட்டத்தின் 20(1) ஆம் பிரிவின் கீழ் அவசரகால நிதியம் நிறுவப்பட்டாலும், தொடர்ச்சியான விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையால் இயற்றப்பட்டுள்ளது.

சுருக்கப் பெயர்

1. இந்தச் சட்டம் 1990 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க அவசரகால நிதிச் சட்டம் என அறியப்படுவதுடன், ஆளுநரால் அனுமதி அளிக்கப்பட்ட திகதியில் இருந்து இது அமலுக்கு வரும்.

மாகாண அவசரகால நிதி:

2. அவசராகல நிதி (இனிமேல் நிதி என குறிப்பிடப்படுகிறது) மாகாணத்தின் எதிர்பாராத செலவினங்களைச் சந்திக்கும் நோக்கத்திற்காக இதன் மூலம் நிறுவப்பட்டுள்ளது.

II. மாகாண நிதியிலிருந்து ஒரு மில்லியன் (1) இலட்சம் ரூபாயும் இந்த நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டும், மேலும் அந்த தொகை நிதியத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

III. மாகாண சபையினால் உருவாக்கப்பட்ட நியதிகளின் பிரகாரம், காலத்துக்குக் காலம் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் அனைத்துத் தொகையும் இந்த நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும்.

நிதியிலிருந்து முற்பணம் வழங்கல் 20(2) பிரிவின்படி.

3. நிதியிலிருந்து முற்பணம் செலுத்துவதில், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் உப பிரிவு 20 (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

நிதியப் பொறுப்பு ஆநர் கீழிருக்க வேண்டும்

4. நிதியின் அறங்காவலர் ஆளுநரின் கீழ் இருக்கும், மேலும் அதிலிருந்து எழும் அனைத்து கொடுப்பனவுகளும் அவரால் செய்யப்பட வேண்டும்.